# அணில் சொல்லிய பாடம்



ஏ.எம். கஸ்புள்ளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணில் சொல்லிய பாடம்

(சிறுவர் பாடல்கள்)

கல்வி அமைச்சு

அனுமதிப்பத்திரம்

**புத்தகத்தின் பெயர்** அணில் சொல்லிய பாடம் **அனுமதிப் பத்திரம் இல. EPAB/2019/26000**

**நூலாசிரியர்** ஏ.எம். கஸ்புள்ளா

1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்கொடை பெறும் சுய இரட்டை மொழி மற்றும் ஆங்கிலம் பாடசாலை தொடர்பான பிரமானக் குறிப்பின் 19/ஏ வாசகத்தின் கீழ் கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கிறேன்.

**புஷ்பகுமார விதானகே**
செயலாளர்
கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை

2019 ஜூன் மாதம் 26
கல்வி அமைச்சு "இசுருபாயா" பத்தரமுல்ல
**அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் திகதி** 2024.06.25

செய்யப் பதிப்பகம்

கட்டையாறு வீதி
சின்னக் கிண்ணியா - 02
தொ: 077 4488441

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணில் சொல்லிய பாடம்
© ஏ.எம். கஸ்புள்ளா
முதலாவது பதிப்பு: 2019

| | | |
|---|---|---|
| வகை | : | சிறுவர் இலக்கியம் |
| பக்கம் | : | 28 |
| அளவு | : | B5 |
| கணனி வடிவமைப்பு | : | எம்.ஏ.எம். அஸ்மி, கிண்ணியா. (075 7022680) |
| அச்சுப் பதிப்பு | : | ஏ.ஜே. பிரின்ட், தெஹிவளை, இலங்கை |
| வெளியீடு | : | செய்ப் பதிப்பகம், கட்டையாறு வீதி, சின்னக் கிண்ணியா - 02, தொ.பே. 077 4488441 |
| விலை | : | 200/- |
| ISBN | : | 978-955-4840-03-4 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தீந்தமிழ் வாழும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஏறத்தாழ பதினாறு கிலோமீற்றர் தொலைவிலுள்ள கிண்ணியா பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட சின்னக்கிண்ணியா, கட்டையாறு வீதி என்னும் முகவரியினையுடைய ஏ.எம். கஸ்புள்ளா திருகோணமலை, சீனக்குடா டோக்கியோ சீமெந்து நிறுவனத்தில் தற்போது பணிபுரிந்து வருகிறார்.

மார்க்கப்பற்று மிகுந்த யூசுப் மௌலவியின் மகளான சாஜிதா ஆசிரியை யினை வாழ்க்கைத் துணைவியாக வரித்துக் கொண்டவர். மூன்று ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையுமாக நான்கு மழலைச் செல்வங்களுக்குத் தந்தையான தம்பி கஸ்புள்ளா, 1990 ஆம் ஆண்டு எழுத்துலகில் காலடி பதித்தவர். பாடசாலையில் கல்வி பயிலும் போதே இலக்கியத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

"பூனைக் குட்டி" என்ற தலைப்பில் சிறுவர் கவிதையொன்று முதன் முதலில் தினகரனில் வெளிவந்தது. அதைத் தொடர்ந்தும் இவரது ஆக்கங்கள் தேசிய நாளிதழ், வார இதழ்களிலும் பல்வேறு சஞ்சிகைகளிலும் வெளிவந் துள்ளன. 2016 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் கௌரவிக்கப்பட்ட இவருக்கு, கண்டி மலையக கலை கலாசார சங்கம் "தேசாபிமானி" என்ற பட்டத்தையும் வழங்கி கௌரவித்தது.

2018 இல் நடைபெற்ற கிண்ணியா பிரதேச சாகித்ய விழாவில் "கவிச் சுடர்" என்ற பட்டமும், பொன்னாடை கௌரவமும் பெற்ற இவரின் "விடியும் பொழுதும் விலகிடும் இருளும்" என்ற கிராமியக் கவிதை நூல் பாடசாலை நூலகங்களுக்குரிய நூல் என்ற கல்வி அமைச்சின் அங்கீகாரமும் பெற்றது. "கற்க கசடற" என்ற சிறுவர்களுக்கான கட்டுரை நூலும் "நெஞ்சினிலே..." என்ற கவிதை நூலும் இவரால் வெளியிடப்பட்டது. இவரின் நான்காவது நூலாக "அணில் சொல்லிய பாடம்" என்ற சிறுவர் பாடல் நூல் வெளிவருகின்றமை மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

எமது பிரதேசத்தின் சிறுவர் இலக்கியம் படைத்தவர்களான கலாநிதி கேணிப்பித்தன், ச.அருளானந்தம், கவிஞர் தாமரைத்தீவான், கவிமணி அ.கௌரிதாசன், தேசகீர்த்தி, கவிஞர் பீ.ரீ. அஸீஸ், கலாநிதி கே.எம். எம். இக்பால், கவிஞர் ஜே.பிரோஸ்கான், கவிஞர் மனாபு ஏ. றசூல், கவிஞர் எம்.ரீ.சஜாத், மற்றும் கவிதாயினிகளான ஜெனீரா ஹைறுல் அமான், பாயிஷா அலி போன்றவர்களும் அடங்குவர்.

முயற்சியும் பயிற்சியும் எத்துறை சார்ந்தவர்களையும் ஒரு முன்னேற்ற கரமான பாதைக்குச் இட்டுச் செல்லுமென்ற கூற்றுக்கு அமைவாக ஏ.எம். கஸ்புள்ளா குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் நான்கு நூல்களை வெளிக்கொணர்ந்தமை அவர்தம் அதீத முயற்சியின் அடையாளமென்று கூறினாலும் அது மிகையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அணில் சொல்லிய பாடம்**

சிறுவர் பாடல் எழுதுவதென்பது இலகுவானதொரு காரியமல்ல. சிறுவராக தாமும் மாறி அவர்களது விருப்பு வெறுப்புக்களை இனங்கண்டு, அவர்களுக்குப் பிரியமான கால வேளைகள், விருப்பமான விடயங்கள், சிரமத்தை நோக்குகின்ற சந்தர்ப்பங்கள் அனைத்தையும் தேர்ந்து, பரிசீலித்து, அவர்தம் எண்ணம், ஆசை வட்டத்துக்குள் நின்று புனையப்படுவதே சிறுவர்களுக்குரிய பாடல்களாகும்.

இந்தச் சீரிய முயற்சியில் தம்பி ஏ.எம். கஸ்புள்ளா பாரிய வெற்றியினைத் தனதாக்கியுள்ளார். பதினேழு தலைப்புக்களையும் அவர் தேர்ந்த விதத்தைக் கூர்ந்து பார்த்தவேளை அவைகள் எனக்கு புலப்பட்டது. இவர் வடித்த பாடல்களில் "அணில் சொல்லிய பாடம்" என்ற பாடல் இந்நூலுக்கு மகுடமாய் அமைகிறது. இதில் மனதில் இன்பம் பயப்பனவான சொல்லாடல்கள் மிகைத்துள்ளமையினையும் பார்க்க முடிகிறது.

"அழகான வண்ணாத்தி"யென்ற பாடலில்,
"பின்னால் நானும் ஓடியே
பிடித்துப் பார்க்க வேண்டுமே"
"தங்க நிறத்தைப் போலவே
தம்பி பிடித்த வண்ணாத்தி" எனவும்,

"எங்கள் வீட்டுப் பூனை" என்ற பாடலில்,....
பூனை ஒன்று மதிலிலே
பூட்டிக் கிடக்கும் வீட்டினை
எட்டி எட்டிப் பார்க்குதே
ஏதோ ஒன்றைத் தேடுதே"

"கதவு திறக்கும் வரையிலே
காத்துக் காத்து நிற்குதே
எலியார் வீட்டு மூலையில்
ஒளிந்து நிற்கக் கண்டதே" என்ற வரிகளும்,

"அணில் சொல்லிய பாடம்" என்ற பாடலில், .........
"கிளைகள் தாவிப் பாய்ந்ததாம்,....
கீழே விழுந்தும் எழுந்ததாம்"

கால நேரம் வரும்வரை
காத்திருந்து செயலினை
நாமும் செய்தால் நலமென
அணிலின் பாடம் சொன்னதே" என்ற வரிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்ளத்தில் பூக்கும் பூ" என்ற பாடலில், ..........

"மண்ணில் மலரும் பலபூக்கள் - அதில்
மனதில் நிறைந்தன சிலபூக்கள்" என்ற வரிகளும்

"ஆடை" யென்ற பாடலில், ............

"அழகு மிக்க ஆடை
அம்மா தந்த ஆடை" என்ற வரிகளும்,

"வாழ்வின் தேவை" என்ற பாடலில், ............

"என்றும் கற்று வாழவே,
எண்ணும் எழுத்தும் தேவையே!
அன்னை, தந்தை, அயலவர்
அன்பும் வாழ்வில் தேவையே" என்ற வரிகளும்,

"நலமாக வாழ" என்ற பாடலில், ........

"கண்ட கண்ட உணவை
கடையில் வாங்கி உண்டால்,
வந்து சேரும் நோயால்
வருந்தி வாடக் கூடும்" என்ற வரிகளும்,

"மரங்கள் நடுவோம்" என்ற பாடலில், ........

ஒவ்வொரு வீட்டிலும்
மரங்கள் நடுவோம்;
நிழலும் காற்றும்
நிலையாய்ப் பெறுவோம்!"

மரங்கள் நட்டு
அடையும் பயனால்
நெடுநாள் வாழும்
வரங்கள் பெறுவோம்" என்ற வரிகளும்,

"பாலம் என்ற பாடலில்", ........

"நீண்ட கனவுப் பாலம்
நிலையாய் வந்தது பாலம்,
ஆழக் கடலின் மேலே
அழகாய் நிற்கும் பாலம்" என்ற வரிகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அணில் சொல்லிய பாடம்**

"காலையின் அழகு" என்ற பாடலில், .........

"முடங்கிக் கிடந்த இருளோனும்
முட்டிமோதித் தொலைகிறதே!

"புத்தாண்டு வந்ததே" என்ற பாடலில், .............

"நல்ல நேரம் பிறக்கட்டும்
நமது வாழ்வு சிறக்கட்டும்" என்ற வரிகளும்,

"செல்லமே" என்ற பாடலில், .........

"சின்னச் சின்ன மழைத்துளி போல்
சிந்தும் உந்தன் புன்னகைகள்" என்ற வரிகளும்,

"வண்ண வண்ண மீன்கள்" என்ற பாடலில், ..........

மின்னும் மின்னும் கண்கள்
மின்னலடிக்கும் தோல்கள்
இன்னும் இன்னும் அழகாக
இருக்கும் எந்தன் மீன்கள்

என்ற வரிகளையும் ஆசிரியரின் கவித்துவ ஆளுமைக்கும் அழகியல் சிருஷ்டிப்புக்கும் உதாரணத்துக்கும், இசை நயத்திற்குமாக சுட்டுகிறேன். சிறுவர்களின் ஊக்கத்திற்கும், உற்சாகமான ஈடுபாட்டுக்கும் அபிநயத்துடன் ஆடிப்பாடவும், கூடி மகிழவும் இந்தப் பாடல் வழிவகுக்குமென்பதோடு மொத்தத்தில் அற்புதமான பாடல்கள் உள்ளனவென்று கூறி நூலாசிரியரின் எதிர்காலம் மேலும் சிறக்க இதயசுத்தியோடு வாழ்த்தி முடிக்கின்றேன்.

**கவிமணி அ. கௌரிதாசன்**
**வள்ளுவர் வீதி**
**ஆலங்கேணி கிழக்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறார்களின் அகம் புறம் பேசும் பாடல்கள்

சிறார் இலக்கியம் என்பது புனைகவிதை,நவீன இலக்கிய வடிவங்களைப் போல கடினமானதுதான். ஈழத்து இலக்கியப் பரப்பில் பல்வேறு வகையான வடிவம் சார்ந்த சிறுவர் படைப்புக்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. அவ்வாறான ஒரு முதல் முயற்சியை கிழக்கிலங்கையின் திருகோணமலை கிண்ணியாவைச் சேர்ந்த ஏ.எம். கஸ்புள்ளாவும் மேற்கொண்டிருக்கிறார்.

சிறுவர் இலக்கியங்கள் நீண்டு விரிந்து தொடராக வந்து கொண்டிருந்தாலும் ஈழத்துச் சிறுவர் பாடல் துறையிலே போதுமான வளர்ச்சி ஏற்பட்டதாய் தெரியவில்லை. இதற்கு சில காரணங்கள் உண்டு.சிறுவர் மனங்களை அப்பட்டமாக எழுதி விடுவதென்பது அவ்வளவு எளிதானதல்ல அவ்வளவு சீக்கிரம் அவர்களது மன உலகத்தை படம் பிடித்திடவும் முடியாது. மிகவும் கடினமானதும் கூட. ஆனால் அந்த சிறார் பருவத்தை நாம் ஒவ்வொருவரும் கடந்து அந்த உலகத்தில் தத்தி தாவி உருண்டு புரண்டு வந்தவர்களாயினும் இன்றைய சிறார் உலகம் அவர்களது வாழ்க்கைச் சூழல் வேறு. இப்படியான சிறார்களின் மனங்களில் வாழ்வதென்பது கொஞ்சம் கடினம்தான். என்றாலும் சகோதரர் ஏ.எம். கஸ்புள்ளா தனது இந்த அணில் சொல்லிய பாடம் என்ற நூலில் நிறைந்துள்ள பதினேழு பாடலினூடாக தான் சார்ந்த சிறுபராயத்தை கண் முன்னே கொண்டு வந்து.தன் உலகின் நிழற்பிரதியை இங்கே நினைவுக்குற்படுத்தி விடுகிறார்.

மேலே கூறப்பட்டது போல சிறுவர்களிடத்தில் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தும் அவரது எண்ணத்தை சிறார் சூழலியலிலிருந்து தொடங்குகிறார்.எவ்வாறு என்றால் சிறார்களின் சூழலியல்முக்கியத்துவத்தை முன் நிறுத்தினாலே அவர்களின் ரசனை மனதை வெல்ல முடியும் அவர்களை வாசிப்பு உலகத்துக்குள்ளும் கொண்டு வந்திட முடியும் என்ற விடயத்தை தன் பாடல் வரிகளால் அவர் நம்பிக்கை ஊட்டுகிறார்.

உண்மையில் சிறுவர் பாடல்களை எழுதும் போது மிகவும் பொறுமையோடு அவர்களுக்கான வார்த்தைகளை கையாளவேண்டும். அப்போது தான் நாம் அவர்களால் வாசிக்கப்படுவோம்.

அந்த வகையில் சகோதரர் ஏ.எம்.கஸ்புள்ளாவின் இத்தொகுப்பு சிறார்களின் மனங்களை வென்று கொண்டாடப்படுமென்று வாழ்த்துகின்றேன்.

நன்றியுடன்

எழுத்தாளர் ஜே. பிரோஸ்கான்
பணிப்பாளர்
பேனா இலக்கியப் பேரவை
தொ.இல.077 93 00 397



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் உரை

சிறார்களின் மனநிலைகளை அறிந்து அவர்களது உளவியல் சார்ந்ததும் உற்சாகத்தை ஏற்படுத்துவதுமான சிறுவர் இலக்கியப் படைப்புக்களின் தேவை அதிகரித்தும் இன்னும் சிறுவர் படைப்புக்கள் வெளிவந்து கொண்டிருக்கும் ஒரு தருணத்தில்தான் எனது "அணில் சொல்லிய பாடம்" எனும் சிறுவர் பாடல் தொகுப்பும் வெளிவருகிறது.

சிறுவர்கள் தமது வாழ்வில் அன்றாடம் கண்டு கழித்த காட்சிகளின் நிகழ்வுகளை உள்ளடக்கிய பதினேழு தலைப்புக்களில் இச்சிறுவர் பாடல் தொகுதியை ஆக்கியுள்ளேன்.

"அழகான வண்ணாத்தி" என்ற தலைப்பில் அமைந்த பாடலில் வண்ணத்துப்பூச்சி என்றே வரவேண்டும் ஆனால் பாடல் நயத்துக்காக அழகான வண்ணாத்தி என்று குறிப்பிட்டுள்ளேன்.

மேலும் சிறுவர்களின் உலகம் தனித்துவமிக்கதாகும். அந்தத் தனித்துவத்தை இல்லாமல் செய்கின்ற குறுக்கீடுகள், அவர்கள் மீதான சுமைகள், துன்புறுத்தல்கள் போன்றவைகள் களையப்பட்டு நதிபோல அவர்கள் சுதந்திரமாக ஓடிக்கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் சிறார்களது ஆரம்ப வாழ்க்கை அழகாக அமையும். "முதற் கோணில் முற்றும் கோணல்" என்பதாக இருந்துவிடக் கூடாது. ஏனெனில் நாளைய சமூகத்தின் தலைமைத்துவத்தை சுமக்கும் பொறுப்பு அவர்களின் கைகளிலேதான் தங்கியிருக்கின்றது. எனவேதான் அவர்களுக்கான வளங்களை உருவாக்கி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். அந்த வகையில் சிறுவர்களது ஒழுக்கப் பண்புகளையும் அவர்களது நடத்தைகளையும் ஒழுங்குபடுத்தும் சிறுவர் இலக்கியப் படைப்புக்கள் வெளிவர வேண்டும். என்னால் இங்கு தொகுக்கப்பட்டுள்ள "அணில் சொல்லிய பாடம்" எனும் இந்நூல் அவர்களது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்ற எனது இந்தக் கனவுகள் நனவாக வேண்டும். மேலும் இந்நூலுக்கு அணிந்துரை தந்த கவிமணி அ.கௌரிதாசன் அவர்களுக்கும், வாழ்த்துரை தந்த கவிஞர் ஜே.பிரோஸ்கான் அவர்களுக்கும் மற்றும் பின்னட்டைக் குறிப்பைத் தந்த கவிஞர் செ.ஞானராசா அவர்களுக்கும், இந்நூலை கணினி வடிவமைப்புச் செய்த எம்.ஏ.எம். அஸ்மி அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏ.எம். கஸ்புள்ளா,
கட்டையாறு வீதி,
சின்னக் கிண்ணியா - 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

1. அழகான வண்ணாத்தி ........................................11
2. எங்கள் வீட்டுப் பூனை ........................................12
3. மழைக் காலம் ........................................13
4. அணில் சொல்லிய பாடம் ........................................14
5. உள்ளத்தில் பூக்கும் பூ ........................................15
6. இவைகள் உனதா? ........................................16
7. ஆடை ........................................17
8. வாழ்வின் தேவை ........................................18
9. நலமாக வாழ ........................................19
10. மரங்கள் நடுவோம் ........................................20
11. காற்றின் விளையாட்டு ........................................21
12. குளம் ........................................22
13. பாலம் ........................................23
14. காலையின் அழகு ........................................24
15. புத்தாண்டு வந்ததே! ........................................25
16. செல்லமே! ........................................26
17. வண்ண வண்ண மீன்கள் ........................................27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணில் சொல்லிய பாடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1. அழகான வண்ணாத்தி

சின்னச் சின்ன வண்ணாத்தி
புள்ளி போட்ட வண்ணாத்தி
முன்னும் பின்னும் அழகுதான்
முட்டிமோதிப் பறக்குதே!

(சின்னச் சின்ன வண்ணாத்தி)

பின்னால் நானும் ஓடியே
பிடித்துப் பார்க்க வேண்டுமே
மின்னல் போல வேகம்தான்
கண்ணில் காண ஆசைதான்!

மாடி வீட்டு மேலவும்
மஞ்சல் நிற வடிவிலே
ஆடி ஆடிப் பறக்குதே
அடடா மனசும் ரசிக்குதே!

தங்க நிறத்தைப் போலவே
தம்பி பிடித்த வண்ணாத்தி
அங்கம் மெலிந்து காணுதே
அடடா வானில் போகுதே..

(சின்னச் சின்ன வண்ணாத்தி )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2. எங்கள் வீட்டுப் பூனை

பூனை ஒன்று மதிலிலே
பூட்டிக் கிடக்கும் வீட்டினை
எட்டி எட்டிப் பார்க்குதே
ஏதோ ஒன்றைத் தேடுதே!

கதவு திறக்கும் வரையிலே
காத்துக் காத்து நிற்குதே
உதவ யாரும் இல்லையோ
உள்ளம் வருந்திக் கொண்டதே!

வீட்டுக்காரர் வந்ததும்
வாசல் படிக்கு வந்ததே
கதவு திறந்து கொண்டதும்
கட்டிலினுள் நுழைந்து கொண்டதே!

எலியார் வீட்டு மூலையில்
ஒளிந்து நிற்கக் கண்டதே
வெளியே அதனை துரத்தியே
வீட்டுப் பொருளைக் காத்ததே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3. மழைக் காலம்

மழைத்தூறல் மழைத்தூறல்
பொழிந்து நிற்குதே - அது
மலைமீதும் வெளிமீதும்
வழிந்து நிற்குதே!

கடல் நடுவிலும் மழைத்தூறல்
கரை நெடுகிலும் மழைத்தூறல்
திடல் தோறும் மழைத்தூறல்
சிணு சிணுக்கும் மழைத்தூறல்

காற்றோடு வீசும் மழையால்
மரங்கள் முறிந்ததே
வீட்டோர ஜன்னல் கதவும்
மூடித் திறக்குதே

அன்னாந்து பாரு
வான மழையினை
இந்நேரம் தேடு
கூதல் உடையினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 4. அணில் சொல்லிய பாடம்

மரத்தின் உச்சி தன்னிலே
மாம்பழம் ஒன்று இருந்ததாம்
மரஅணிலார் அதனைக் கண்டதால்
மணத்தைத் தேடி வந்ததாம்

அழகிய பழமோ என்று
அணிலோ மனதில் நினைத்ததாம்
கிளைகள் தாவிப் பாய்ந்ததாம்
கீழே விழுந்தும் எழுந்ததாம்

சுற்றிச் சுற்றி நின்றதாம்
சுலபமாக ஏறிக் கொண்டதாம்
முற்றிலும் பழுக்க வில்லையென
முகர்ந்து பார்த்துக் கண்டதாம்

மறுநாள் காலை வந்ததாம்
மனதில் சந்தோஷம் கொண்டதாம்
பழுத்திருந்த மாம்பழங்களை
கொறித்துக் கொறித்துத் தின்றதாம்

காலம் நேரம் வரும்வரை
காத்திருந்து செயலினை
நாமும் செய்தால் நலமென
அணிலின் பாடம் சொன்னதே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 5. உள்ளத்தில் பூக்கும் பூ

மண்ணில் மலரும் பல பூக்கள் - அதில்
மனதில் நிறைந்தன சில பூக்கள்
கண்ணைக் கவரும் ரோசாப்பூ - நிதம்
காலையில் மலர்வதே அதன் சிறப்பு..!

மல்லிகைப் பூ மணக்கும் பூ - மாதர்
தலையிலே சூடி மகிழும் பூ
அல்லிப் பூ அழகுப் பூ - தன்
அடிவரை மணக்கும் தாளம் பூ

வேப்பம் பூ மருந்துவப் பூ
வேதனை பலதைத் தீர்க்கும் பூ
முல்லைப் பூ காட்டுப்பூ - வீட்டு
முற்றத்தில் பூக்கும் முருங்கைப் பூ

இரவில் பூக்குமாம் இன்னொரு பூ - அது
இரவு ராணியெனும் இதம் தரும் பூ
உணவுடன் சேருமாம் அகத்திப் பூ - எம்
உள்ளத்திலே பூக்குமாம் அன்பெனும் பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 6. இவைகள் உனதா?

வானமே வானமே - அந்த
வெண்ணிலவு உனதா?
வானமே வானமே - பறக்கும்
பறவைகளும் உனதா?

வானமே வானமே - வீசும்
தென்றல் காற்று உனதா?
வானமே வானமே - மலை
முகடுகளும் உனதா?

வானமே வானமே - அந்த
வான் ஊர்திகள் உனதா?
வானமே வானமே - பெய்யும்
மழைத் துளிகளும் உனதா?

வானமே வானமே - அந்த
இடி மின்னல்கள் உனதா?
வானமே வானமே - அந்த
விண் மீன்களும் உனதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 7. ஆடை

அழகு மிக்க ஆடை
அம்மா தந்த ஆடை
பள பளக்கும் ஆடை
பள்ளிக்குச் செல்லும் வெள்ளாடை

மானம் காக்கும் ஆடை
மகிமை சேர்க்கும் ஆடை
நானும் நீயும் அணிந்து
மகிழ்வு கொள்ளும் ஆடை

சின்னக் குழந்தை போட்டால்
தூக்கிக் காட்டும் ஆடை
வண்ணம் பலதைக் கொண்டே
கண்ணைக் கவரும் ஆடை

சூட்டைத் தணிக்கும் ஆடை
குளிரைத் தாங்கும் ஆடை
நாடு நகரம் சுற்ற
நமக்குத் தேவை ஆடை

மாற்றம் தந்தது ஆடை - அழகுத்
தோற்றம் தந்தது ஆடை
ஏற்ற விலைக்கு கடையில் - நாளும்
எமக்கு கிடைக்கும் ஆடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 8. வாழ்வின் தேவை

இன்று மலர்ந்த பூக்களாய்
இருக்கின்ற பிள்ளைகள்
என்றும் கற்று வாழவே
எண்ணும் எழுத்தும் தேவையே..!

சின்னச் சின்ன பிள்ளைகள்
சிரித்து மகிழ்ந்தாடவே
அன்னை, தந்தை, அயலவர்
அன்பும் வாழ்வில் தேவையே..!

தத்தித் தத்தி நடந்திடும்
தங்கமான பிள்ளைகள்
புத்தி தனை வளர்க்கவே - அறிவுப்
புத்தகங்கள் தேவையே

இல்லத்தினை இன்பமாய்
ஆக்குகின்ற பிள்ளைகள்
நல்ல பேறை வாங்கினால்
தீரும் எங்கள் தொல்லைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 9. நலமாக வாழ

உரிய பயிற்சிகள் செய்து
உடல் நலம் காப்போம்
தெரிவோம் நல்ல உணவை
தேவைக் கதிகம் தவிர்ப்போம்

கண்ட கண்ட உணவும்
காலம் கடந்த உணவும்
கொண்டு வரும் நோய்கள்
கண்டு நாமும் விலக்குவோம்

டெங்கு என்னும் நுளம்பும்
தங்கும் இடங்கள் அழிப்போம்
எங்கும் அதனைச் செய்து
எல்லோரும் நலமாக வாழ்வோம்

இத்தலம் பெருகும் கழிவுகளை
ஏற்ற இடத்தில் சேர்த்திடுவோம்
நித்தம் நமது வாழ்வினிலே
சுத்தம் என்பதை பேணிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. மரங்கள் நடுவோம்

மரங்கள் நடுவோம்
மரங்கள் நடுவோம் என்றென்றும்
நிழலும் காற்றும்
நிலையாய்ப் பெறுவோம்
என்றென்றும்

ஒவ்வொரு வீட்டிலும்
மரங்கள் நடுவோம்
அவ்வாறு செய்தே சூழலை
அழகாய் காப்போம்

உலகை ஈர்க்கும்
அழகைச் செய்வோம்
நேசம் வைத்தே பசுமை
தேசம் காண்போம்



மரங்கள் நடுவோம்
மரங்கள் நடுவோம்
என்றென்றும்
நிழலும் காற்றும்
நிலையாய்ப் பெறுவோம்
என்றென்றும்

மரங்கள் நடுவோம்
மரங்கள் நடுவோம்
மண்ணை உழுது
மரங்கள் நடுவோம்
மரங்கள் நட்டு
அடையும் பயனால்
நெடுநாள் வாழும்
வரங்கள் பெறுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 11. காற்றின் விளையாட்டு

கச்சான் காற்று அடிக்குதே
காட்டு மரம் சாயுதே
பட்டம் ஒன்று பறக்குதே
பாதி வழியில் துடிக்குதே!

அம்மா அணிவித்த ஆடையை
அழுக்காக்கிச் செல்லுதே
சும்மா கிடந்த மண்ணை
சுழற்றிச் சுழற்றி அடிக்குதே!

ஓலைக் குடிசை பறக்குதே
ஓட்டை வீடாய் ஆனதே
ஆளைத் தள்ளிப் போகுதே - எங்கும்
அடுப்புப் புகையானதே!

நீண்ட மரங்கள் முறிந்ததே
நீலக் கடலும் எழுந்ததே
கண்ட காட்சிகள் எத்தனை
காற்றின் விளையாட்டு ஓயாதோ?

வேகம் கொண்டு எங்களை
விரட்டுகின்ற காற்றே நீ
ராகமான தென்றலாய்
வந்து வீசக் கூடாதா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 12. குளம்

சின்னஞ் சிறிய குளமாம்
சுங்கான் குழிக் குளமாம்
வண்ணப் பூக்கள் அருகே
வளர்ந்து நிற்கும் குளமாம்

தக்காளி கொச்சி வெண்டியென
தளிர்க்க உதவும் குளமாம்
எக்காலமும் நாம் விரும்பும்
எங்க ஊரு குளமாம்

காலை மாலையென மக்கள்
குளித்துச் செல்லும் குளமாம்
சாலையில் போய் வருவோர்
ரசித்துச் செல்லும் குளமாம்

கொக்குகள் வந்து அங்கு
கூடிச் செல்லும் குளமாம்
பறவைகளும் மிருகங்களும் தண்ணீர்
பருகிச் செல்லும் குளமாம்

வயலில் நெல்மணி விளைய
நீரைப் பாய்ச்சும் குளமாம்
உழவர் மனதில் வற்றாத
ஊற்றாய் நிற்கும் குளமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 13. பாலம்

நீலக் கடலின் மேலே
நிமிர்ந்து நிற்கும் பாலம்
காலை மாலையென எல்லோரும்
கடந்து செல்லும் பாலம்

நீண்ட கனவுப் பாலம்
நிலையாய் வந்தது பாலம்
ஆண்டு பல கழிந்தாலும்
அழகாகக் கட்டிய பாலம்

பயணச் செலவு மீதம்
பள்ளிக்குச் செல்லவும் பாலம்
உள்ளத்தின் சந்தோஷத்தை
ஊருக்குத் தந்தது பாலம்

இலங்கையின் நீண்ட பாலம்
அதுவே "கிண்ணியாப் பாலம்"
துயரங்கள் இனி இல்லையென
துலங்கும் நமது பாலம்

ஆழக் கடலின் மேலே
அழகாய் நிற்கும் பாலம்
காலம் முழுதும் எம்மை
சுமந்து நிற்கும் பாலம்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 14. காலையின் அழகு

கூ கூ கூக்கு கூ கூ
விடியல் தரும் குயில்களே
காற்றின் சுகம் இதமானதே
கதிரோன் ஒளி சூடானதே!

கடலில் குளித்த கதிரோனும்
கண்ணைச் சிமிட்டி எழுகிறதே
முடங்கிக் கிடந்த இருளோனும்
முட்டி மோதித் தொலைகிறதே!

சின்னப் பசு அழைக்கின்றதே
அம்மாப் பசு விரைகின்றதே
வண்ணப் பறவை பறக்கின்றதே
வள்ளம் வந்து கரை சேர்கின்றதே!

கரையைத் தேடி
அலை வருகின்றதே
இரையைத் தேடி
கொக்கு காத்து நிற்கின்றதே!

நேரம் விரைந்து செல்கின்றதே
நெற்றி வியர்வை எழுகின்றதே
காலை அழகோ எத்தனைதான்
கண்ணில் அடக்க முடியலையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 15. புத்தாண்டு வந்ததே!

புத்தாண்டு வந்ததே
புத்தாண்டு வந்ததே
குயில்கள் கூடிக் கூவுதே
தோட்ட மரங்கள் காய்க்குதே

பூக்கள் பூத்துக் குலுங்குதே
புத்தாடையில் அழகு ஜொலிக்குதே
பாக்கள் பாடி மகிழலாம்
பார்ப்போர் மனதைக் கவரலாம்

கடந்த கால நினைவுகள்
கண்ணில் மலரும் கனவுகள்
சுமந்து வந்தாய் புத்தாண்டே
சுகங்கள் தந்தாய் புத்தாண்டே

வண்ண வண்ண பலகாரம்
கொடுத்துண்ணும் பலகாரம்
அம்மா செய்த பலகாரம்
அயலவர் விரும்பும் பலகாரம்

உள்ளம் திறந்து பேசலாம்
உறவுகள் வீடு செல்லலாம்
நல்ல நேரம் பிறக்கட்டும்
நமது வாழ்வு சிறக்கட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 16. செல்லமே!

வானத்தின் நிலவாய் ஒளி தருவாய்
வண்ணாத்திப் பூச்சாய் வலம் வருவாய்
காட்டு மயிலின் நடனம் போல்
கண்களை மெல்ல அசைத்திடுவாய்

திறந்த வெளியில் நடந்திடுவாய்
பிறந்த மேனியை மண்ணில் உருட்டிடுவாய்
பறந்து செல்லும் வான் பறவைகளை
பார்த்து நீயும் ரசித்திடுவாய்

சின்னச் சின்ன மழைத்துளி போல்
சிந்தும் உந்தன் புன்னகைகள்
கண்ணைக் கவரும் மின் மினியாய்
காட்சி தரும் உன் பல் வரிகள்

செல்வம் உன்னால் குவிந்திடவும்
சொந்தம் எல்லாம் சேர்ந்திடவும்
செல்லம் உன்னை என்றுமே
இல்லம் தன்னில் காத்திடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 17. வண்ண வண்ண மீன்கள்

வண்ண வண்ண மீன்கள்
வீட்டில் வளர்க்கும் மீன்கள்
சின்னச் சின்ன மீன்கள்
சிரிக்க வைக்கும் மீன்கள்

மின்னும் மின்னும் கண்கள்
மின்னலடிக்கும் தோல்கள்
இன்னும் இன்னும் அழகாக
இருக்கும் எந்தன் மீன்கள்

வளைந்து வளைந்து செல்லும்
வாலை ஆட்டிக் கொள்ளும்
மேலே எழுந்து தானாய்
மூச்சை விட்டுச் செல்லும்

வந்து வந்து பாருங்க
வகை வகையான மீனுங்க
நீந்தி நீந்திச் செல்லுதே
நீருக்குள்ளே துள்ளுதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியர் பற்றி

கவிஞர் ஏ.எம். கஸ்புள்ளா பாடசாலை படிக்கும் காலத்தில் தனது எழுத்துப் பணியை ஆரம்பித்து இன்று கட்டுரைகள், கவிதைகள், சிறு கதைகள் என தேசிய பத்திரிகைகளில் எழுதி வருகின்றார்.

திருகோணமலை டோக்கியோ சீமெந்து தொழிற்சாலையில் பணிபுரியும் இவர் நேரம் கிடைக்கும் போது எழுதிய பாடல்கள் "அணில் சொல்லிய பாடம்" எனும் நூலாக இன்று வெளிவந்துள்ளது. இந்நூல் மூலம் ஏ.எம். கஸ்புள்ளா எதிர்காலத்தில் பல வெற்றிகள் வெறுவாரென்பது எனது நம்பிக்கை!

இத்தொகுதியிலுள்ள "அழகான வண்ணாத்தி" எனும் பாடலில் தொடங்கி "வண்ண வண்ண மீன்களில்" நிறைவு பெறும் பதினேழு பாடல்களும் முத்தானவை. இவர் யோசித்து எழுதிய வரிகளை பலரும் வாசித்து நேசிக்க வேண்டும். வாழ்க! கஸ்புள்ளா, வளர்க! அவரது இலக்கிய முயற்சிகள்.

செ. ஞானராசா,<br>
அதிபர்,<br>
("இலக்கிய வித்தகர்", "இரத்தின தீபம்"),<br>
தி/சிவசக்தி அ.த.க. பாடசாலை,<br>
தம்பலகாமம்.

ISBN 978-955-4840-03-4

விலை: 200/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org